தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-10-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பேரிடர் மீட்பு பணிகள் குறித்த விழிப்புணர்வு அனைவருக்கும் அவசியம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நான்காமாண்டு வேளாண் தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிர் தகவலியல் மாணவ மாணவியர் 50 பேர் அக்டோபர் 13, 2014 அன்று நடைபெற்ற சர்வதேச பேரிடர் இன்னல் குறைப்பு தின விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து வ.உ.சி. பூங்கா வரை நடைபெற்ற இப்பேரணியை மாவட்ட ஆட்சியர் திருமதி. அர்ச்சனா பட்நாயக் அவர்கள் கொடி அசைத்து துவக்கி வைத்தார். அடுத்த நிகழ்ச்சியாக மணி மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறை ஆகியோரால் பேரிடர் காலங்களில் மக்கள் செயல்பட வேண்டிய விதம் மற்றும் வீடு, குடிசை பகுதிகள், பட்டாசுத் தொழிற்சாலை ஆகியவற்றில் ஏற்படும் தீயணைப்பு முறைகள் குறித்த செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் திரு. சி. பால் பிரின்சிலி ராஜ்குமார், துணை ஆட்சியர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. எஸ்.ஆர். சந்திரன், கோட்ட அலுவலர், தீயணைப்புத் துறை கோவை மாவட்டம் அவர்கள் பங்கேற்றார். திரு. குமரேசன், தீயணைப்புத் துறை அதிகாரி அவர்கள் பேரிடர் காலங்களில் காயம்பட்டு இருப்பவர்களை மீட்கும் முறைகள் குறித்து எடுத்துரைத்தார். தீயணைக்கும் முறைகள் மற்றும் மீட்பு பயிற்சியை மாணவர்களுக்கு அளித்தனர். கரியமில வாயு நீர், சோடியம் பை கார்பனேட் ஆகியவை கொண்ட தீயணைப்பு கருவியின் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. பேரிடர் ஏற்பட்ட இடங்களில் உள்ள பொருள்களைக் கொண்டு எவ்வாறு மக்கள் மீட்பது என்பதை மாணவர்கள் உணர்ந்து கொண்டனர்.

மாணவர் திரு. ஆர். சுந்தோஷ் சாலமன் மற்றும் மாணவி செல்வி. வைஷ்ணவி சேகர் ஆகியோர் நிகழ்ச்சியைப் பற்றி தங்கள் கருத்துக்களைக் கூறி ஒரு மாணவனாகவும், சராசரி குடிமகனாகவும் மக்கள் பணி செய்ய வேண்டிய கட்டாயத்தையும், பேரிடர் காலங்களில் உதவி செய்ய நிகழ்ச்சி தங்களுக்கு உறுதுணையாக இருந்தது என்று கூறினார்.

வேளாண் பல்கலை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் மு.ரா. லதா அவர்கள் நன்றியுரை கூறினார். வேளாண் பல்கலை சார்பில் நிகழ்ச்சி ஏற்பாட்டை முனைவர் க. குமுதா, நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் திட்ட அலுவலர் முனைவர் மு. ரா. லதா ஆகியோர் மேற்கொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்